# கீழக்கரை நகர்மன்ற 27.02.2019ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

பொருள் :1

இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 8th SHPC 2018–19-ம் ஆண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.86.40 இலட்சம் (23.40+63.00) மதிப்பீட்டில் சிப்பம் 1 மற்றும் சிப்பம் 2 (Package I&II)–ல் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.1191/பி3/2019 நாள்.21.01.2019–ந் தேதிய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும், திட்டப்பணிகளில் சிப்பம்–1 (Package I) கண்டுள்ள இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க மின்கலன் மூலம் இயஙகும் வாகனம் 13 எண்ணம் வாஙகும் ரூ.23.40 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு 26.02.2019–ம் தேதிய மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு சென்னை, அகார்ட் அட்வர்டைசிங மூலம் 01.02.2019–ம் தேதி ஒரு தமிழ் தினசரி நாளிதழில் மாவட்ட பதிப்புகளிலும் ( District Edition ) பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ11,025/–க்கு பட்டியல் எண்.AAA/1187/18-19 நாள்.04.02.2019–ன் படியானது இந்நகராட்சிக்கு 18.02.2019–ந்தேதி வரப்பெற்றுள்ளது.மேற்காணும் பட்டியல் ரூ.11,025/– மட்டும் சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸிக்கு வழஙகுவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 1224/2018/இ1)

அலுவலகக் குறிப்பு:

சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸி விளம்பர கட்டணம் ரூ11,025/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழஙக மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்.எண்.537.அனுமதிக்கப்பட்டது.

பொருள் :2

கீழக்கரை நகராட்சி வார்டு எண் 1 முதல் 21 முடிய உள்ள பகுதிகளில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள விடுபட்ட குடும்பஙகளை உரிய படிவத்தில் கணக்கெடுப்பு செய்து வருகின்ற 28.02.2019–க்குள் ஒப்படைக்க மாண்புமிகு தலைமைச்செயலர் அவர்களின் 23.02.2019–ந் தேதிய காணொளிகாட்சி ஆய்வுக்கூட்டத்தில் உத்திரவிடப்பட்டது.அதற்கான செலவீனஙகளை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழஙகப்பட்டுள்ளது.எனவே ,மேற்படி உத்திரவின்பேரில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கணக்கெடுப்பு படிவஙகள்,எழுதுப்பொருட்கள்,டோனர்கள் மற்றும் இதர செலவீனஙகளுக்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண்.117/2019/எச்1)

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அங்கரிக்கலாம்

**தீர்மானம்.எண்.538.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :3**

**கீழக்கரை நகர் பகுதி 21 வார்டுகளை கொண்ட வளர்ந்து வரும் நகரமாகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை 38,355 ஆகும். இந்நகராட்சி சுற்றளவு 2.459 சதுரகிலோ மீட்டரில் 110 தெருக்களை உள்ளாடக்கியது. இந்நகராட்சியில் சாலை நீளம் 52 கிலோமீட்டர் ஆகும்.இந்நகராட்சி அரசாணை(MS) எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.08.2010–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்ந்தப்பட்டுள்ளது நகரின் விரிவாக்கத்திற்கு கேற்பவும் இந்நகராட்சியில் தூய்மை பணிகள் முழுமையாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு அரசானை(நிலை) எண்.101 நாள். 30.04.1997–ல் குறிப்பிட்டுள்ள அளவுக்கோலின்படி 156 துப்புரவுப் பணியாளர்கள் தேவையாக உள்ளது. ஆனால் இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள 32 துப்புரவுப் பணியாளர்களில் எண்ணிக்கையில் தற்போது 25 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர்.அரசானை (நிலை) எண்.101 நாள்.30.04.1997–ல் குறிப்பிட்டுள்ள அளவுக்கோலின்படி முதற்கட்டமாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண். 6011/பி3/2017 நாள்.15.06.2017-ன்படி ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் 25 பணியாளர்களும், இரண்டாம் கட்டமாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.6819/2017/பி3 நாள்.14.03.2018–ன்படி ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் 99 பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டு தற்போது (25 + 55 = 80) பணியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள்.**

**அரசானை(நிலை) எண்.101 நாள்.30.04.1997–ல் குறிப்பிட்டுள்ள அளவுக்கோலின்படி அனுமதிக்க வேண்டிய 156 துப்புரவுப் பணியிடங்களுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 112 (32+25+55=112) துப்புரவுப் பணியிடங்கள் போக கூடுதலாக 44 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தேவையாக உள்ளது. இதில் இந்நகராட்சிக்கு 32 அனுமதிக்கப்பட்ட துப்புரவுப் பணியிடங்களில் தற்போது 25 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். ஆகையால் இந்த காலிப்பணியிடத்தின் எண்ணிக்கையை ஈடுகட்டும் வகையில் அளவு கோலின்படி தேவையான துப்புரவுப் பணியாளர் பணியிடத்திற்கு, போக கூடுதலாக 51 துப்புரவு பணியாளர் தேவையாக உள்ளது.**

**இந்நிலையில் மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் கடித ந.க.எண்.104/2014/பி1 நாள்.31.12.2018ந்தேதிய ஆய்வு கூட்ட மற்றும் சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 23.01.2019–ந்தேதிய மாதாந்திர ஆய்வு கூட்ட அறிவுரையின்படி இந்நகராட்சி பகுதியில் சிறிய அளவிலான நுண்**

உரம் தயார் செய்தல் **(On Site Compost),** பெரிய அளவில் குப்பைகளை உருவாக்குபவர்கள் உரம் தயாரித்தல் **(Bulk Waste Generation)-** நுண் உரகிடங்கு உரம் தயார் செய்தல் மற்றும் மறு சுழற்ச்சி செய்தல் போன்ற பணிகளை ஆரம்பிக்கவும் தெரிவித்துள்ளனர்.ஆகையால் இந்நகராட்சி பகுதியில் சிறிய அளவிலான நுண் உரம் தயார் செய்தல் **(On Site Compost),** பெரிய அளவில் குப்பைகளை உருவாக்குபவர்கள் உரம் தயாரித்தல் **(Bulk Waste Generation)-** நுண் உரகிடங்கு உரம் தயார் செய்தல் மற்றும் மறு சுழற்ச்சி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுவதற்கு பணியாளர்கள் பற்றாக் குறையாக இருப்பதால் கூடுதலாக 12 பணியாளர்களை கொண்டு (Out Sourcing) முறையில் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு **30.01.2019**–ந் தேதிய இந்நகர் மன்ற அனுமதியின்படி **21.02.2019**–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது தகுதி வாய்ந்த நிறுவனங்களின் முன்னிலையில் அன்று மாலை **3.30** மணியளவில் ஒப்பந்தப்புள்ளிகளின் விலைக்கூறல்கள் **(Price Bid)** திறக்கப்பட்டது.

அதன்படி, தகுதிவாய்ந்த நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ள விலைவிகிதம் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

மதிப்பீடு.9,96,000/–

| வ. எண் | வேலையின் விபரம் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சி 21 வார்டு பகுதிகளில் உருவாகும் குப்பைகளை இந்நகராட்சி பகுதியில் சிறிய அளவிலான நுண் உரம் தயார் செய்தல் (On Site Compost), பெரிய அளவில் குப்பைகளை உருவாக்குபவர்கள் உரம் தயாரித்தல் (Bulk Waste Generation)–நுண் உரகிடங்கு உரம் தயார் செய்தல் மற்றும் மறு சுழற்ச்சி செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளுவதற்கு தனியார்/தனியார் நிறுவனங்கள் மூலம் (Out Sourcing) முறையில் 12 நபர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளுதல் | **M/S.Ever Gree Enviroment Services.** No.15.காம்ளாக்ஸ், (இந்தியன் ஓவர்சிஸ் பேங்க் எதிரில்), இரயில்வே ரோடு, இராமநாதபுரம்–623501 | ரூ.9,91,440/– மதிப்பீட்டு விலையைவிட 0.39 % குறைவு |
| | | **M.S.MAN POWER AGENCY,** 3/538 N–28 பொன்னயாபுரம், பரமக்குடி–623707 | ரூ.9,95,760/– மதிப்பீட்டு விலையைவிட 0.04% அதிகம் |

[கோப்பு எண். 49 / 2019 /எச்1 ]

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

மதிப்பிட்டு விலையைவிட 0.39% குறைவான விலைவிகிதம் ரூ.9,91,440/—க்கு கொடுத்துள்ள M/S.Ever Gree Environment Services, இராமநாதபுரம்—623501, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

<u>தீர்மானம்.எண்.539.அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :4</u>

அரசாணை (எம்.எஸ்) எண் 113 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ—1) துறை நாள்.14.12.2012—ல் தெரிவித்துள்ளதன்படியும், கீழக்கரை சார்பு ஆய்வாளர், அவர்களின் கடிதத்தின்படியும், இந்நகர் மன்ற 30.11.2018—ந் தேதிய தீர்மானத்தின் அடிப்படையில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடமான இந்நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் இந்நகராட்சி அம்மா உணவகம் கண்காணிப்பு கேமரா (CCTV) 8—எண்ணம் பொருத்தும் பணி செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் இடங்களில் கண்காணிப்பு கேமரா (CCTV) பொருத்தும் பணி செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் 20.02.2019—ந் தேதி வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றம் பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

| வ. எண் | பொருட்கள் விபரம் | QTY | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | SMAK TECH Computers, Sales, Service & Accessories Ramanatha puram | S.K Computers, Sales & - Services Ramanatha puram | ASIAN INFOTECH, Sales & - Services Ramana thapuram |
| | | | PRICE (Rs.) | PRICE (Rs.) | PRICE (Rs.) |
| 1 | ADVANCED HIKVISION HD COLOR DAY / NIGHT 2.4 MEGA PIXEL BULLET / DOME CAMERA | 8 | 28800 | 31200 | 32800 |
| 2 | 16CH HD Video & 1ch. Audio, TRIBRID 1080p Full Channel Real time Playback HDMI, AV | 1 | 17000 | 21000 | 21000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | & VGA OUTPUT 4TB each | | | | |
| 3 | 4TB Surveillance Hard disk | 1 | 15600 | 16600 | 16600 |
| 4 | Cat 6 wire coil | 4 | 10000 | 12000 | 12000 |
| 5 | 8CH POWER SUPPLY | 1 | 3400 | 3600 | 3600 |
| 6 | FITTING AND CONFIGURE | 8 | 6000 | 5500 | 5500 |
| 7 | 2U RACK | 1 | 4600 | 4800 | 4800 |
| 8 | BNC&DC PIN | 24 | 2400 | 2400 | 2400 |
| 9 | VIDEO BALOON | 5 | 3250 | 3250 | 3250 |
| 10 | ELECTRICAL THINGS | | 4500 | 4500 | 4500 |
| 11 | D- LINK MODEM WITH ROUTER | 1 | 3400 | 3400 | 3400 |
| Total | | | 98950 | 108250 | 109850 |

(ந.க.எண்.1143/இ1/2018)

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ.98,950/—க்கு கொடுத்துள்ள SMAK TECH Computers, இராமநாதபுரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் ரூ.98,950/— மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்.எண்.540.அனுமதிக்கப்பட்டது.

பொருள் :5

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பிரிவு உரக்கிடங்கில் குவிந்து கிடக்கும் குப்பைகளை மக்க பயன்படுத்தப்படும் E.M.சொலிசன்மற்றும் அலுவலகஙகள், பள்ளிக்கூடஙகள் , மருத்துவமனைகள், மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகள் சேகரிக்கும் இடஙகள், வீடுகள் ஆகியவற்றின் உள்ளே மற்றும் வெளியே கொசு, ஈ, ஆகியவற்றினால் உண்டாகும் தொற்று நோய்களை தடுக்கும் லெமன் கிராஸ் ஆயில் மற்றும் கிருமி நாசினி மருந்து லைசால் (Lysol) வாஙகுவதற்கு 18.02.2019—ந் தேதி இந்நகர் மன்றத்தில் ரூ 4,75,000/—க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கொசு ஒழிப்பு/ கிருமி நாசினி மருந்துகள் வினியோகம் செய்வதற்கு 25.02.2019—ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | கொசு ஒழிப்பு / கிருமி நாசினி மருந்துகள் விபரம் | விலையின் விகிதம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஜீ.வி.ஏஜென்ஸி மதுரை | எஸ்.எஸ். என்டர்பிரைசஸ் இராமநாதபுரம் | சிவசக்தி டிரேடர்ஸ் நாமக்கல் |
| 1 | E.M.சொலிஸன் | லிட்டர் 1–க்கு (GST Extra) | ரூ.752/– | ரூ.853/– | ரூ.940/– |
| 2 | லைசால் (Lysol) | லிட்டர் 1–க்கு (GST Extra ) | ரூ.85/– | ரூ.87/– | ரூ.90/– |
| 3 | லெமன் கிராஸ் ஆயில் | லிட்டர் 1–க்கு (GST Extra ) | ரூ.2350/– | ரூ.2550/– | ரூ.2800/– |

(கோப்பு எண் 122/2019/எச்1)

அலுவலகக்குறிப்பு

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் (லிட்டர் 1–க்கு GST Extra) குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜீ.வி.ஏஜென்ஸி மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுமக்களின் சுகாதார நலன் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு கொசு ஒழிப்பு மற்றும் கிருமிநாசினி மருந்துகள் வாஙகுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்.எண்.541.அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.